ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
பங்குனி

APRIL
1971

தொகுதி 33
பகுதி 4

Vol. 33
No. 4

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் T. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

நேர் வழியில் செலவு	...	61
ஆரோக்கிய கல்பத்துருமம்	...	63

Annual
Subscription
Rs. 5/-

கார்யாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

THE ARYA VAIDYA SALA · KOTTAKAL

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைதயரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:

31, A. சின்னக் கடைத்தெரு.

திருச்சிராப்பள்ளி–2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும்

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5–00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA **Phone: Office - 3132**
Resi - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருநது சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி: KALIA போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்"   P. B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1. 23 B, பூஸா ரோடு, புது டில்லி : போன் ; 585687
2. மொயிதின் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 ,, 2984
3. கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 ,, 85752
4. வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18 ,, 32988
5. பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 ,, 92
6. மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 ,, 195
7. கடைவீதி, பொன்னானி ,, 41
8. ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 ,, 378
9. கோர்ட் ரோடு, ஆலத்தூர் ,, 87
10. மெயின் ரோடு, கஞ்சிக்கோடு
11. ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,, 33758
12. இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 ,, 4891
13. 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 ,, 33988
14. T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2
15. No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS

(REGD.)

Wholesale Musk, Saffron and Indian Drugs
Merchants,

LUDHIANA ~ PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	சாதாரண பங்குனி	பகுதி 4
Vol. 33	1971 ஏப்ரல்	No. 4

நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நேர் வழியில் செலவு.

ஒரு ஆற்றில் செல்லும் நீரை வாய்க்கால் வழியே பக்கத்தில் உள்ள நஞ்செய் நிலங்களுக்கு தேவையான அளவு பாசனம் செய்து முடிந்தபிறகுதான் தூரத்தில் உள்ள புஞ்செய் நிலங்களுக்கு பம்பு செட் மூலம் கொண்டு செல்வது உசிதம். அப்படியின்றி நஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் தட்டு வரும்படி செய்துவிட்டு தொலைவில் உள்ள புஞ்சை நிலங்களுக்கு பம்பு செட் மூலம் தண்ணீரை இறைத்துக் கொண்டு செல்வது தகாது நியாயமாகாது. நதியுடன் தொடர்புள்ள பூமிகளுக்குத்தான் முதல் பாத்தியதை.

நமது கனம் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் அதிக வருமானமுள்ள தேவஸ்தான பணங்களை ஆஸ்பத்திரிகளுக்கும் கல்வி அபிவிருத்திகளுக்கும் உபயோகப் படுத்தப் போவதாகக் கூறியுள்ளார். பொதுவாக இது வரவேற்கப்படவேண்டிய விஷயங்களில் ஒன்றாகும். ஆனால் எந்தவிதமான ஆஸ்பத்திரி எவ்

வகையான கல்வி என்பது விளங்கவில்லை. ஆங்கிலப்பள்ளிகள் கலாசாலைகள் முதலியன ஹிந்துமதக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தேவஸ்தானப் பணங்களால் ஏற்படுத்தப்படுவது சரியா? அதற்கு ஏராளமான இதர வருவாய் வழிகள் உள்ளன. ஹிந்து தேவஸ்தானத்தின் செல்வத்தால் இந்தியக் கலைகள் ஹிந்துமத அபிவிருத்திக்கான படிப்புக்கள் உள்ள பள்ளிகள் கலாசாலைகள், இந்திய வைத்யக் கல்லூரிகள், இந்திய வைத்ய ஆஸ்பத்திரிகள் முதலியன ஏற்படுத்தினால் உசிதமான வினியோகம் எனக்கூறலாம். வேதங்கள் சாஸ்திரங்கள் தேவாரம் திருவாசகம் பிரபந்தங்கள் பூஜை முறைகள் பூஜைக்குத் தேவையான வாத்யங்கள் நன்கு பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்வதுடன் நோய்தீர்க்கும் பணிக்கு இந்திய வைத்தியத்தையே ஹிந்துமத ஆலயங்களின் செல்வத்தால் அபிவிருத்தி செய்வது சாலச்சிறந்ததாகும் தற்போது இந்திய வைத்தியத்தின் அந்தஸ்து உயர்ந்துள்ளது. இந்திய வைத்தியத்திற்காக ஓர் கௌன்ஸில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. படிப்பு முறையும் எல்லாத் துறைகளிலும் திறமை மிக்கதாக அமைந்துள்ளது. மேலும் நல்ல நல்ல ஆராய்ச்சிகளால் புதிது புதிதான கண்டுபிடிப்புக்கள் ஏற்படும். பண வசதி ஒன்றுதான் முக்ய தேவையாகும் அதிக வருமானமுள்ள தேவஸ்தானங்களிலிருந்து ஆராய்ச்சி நிலையங்கள் நாட்டு வைத்ய ஆஸ்பத்திரிகள் கலாசாலைகள் ஏற்படுத்தினால் ஆங்காங்கு இம்முறை அபிவிருத்தியாவதற்கு சௌகரியம் ஏற்படும். பக்தர்கள் தேவஸ்தானத்திற்கு அர்ப்பணம் செய்யும் திரவ்யத்தை வழிதவறிச் செலவு செய்ததாகவும் ஆகாது. ராமேசுவரம் தேவஸ்தானத்தில் ஓர் இந்திய வைத்ய ஆஸ்பத்திரி நடத்தப்பட்டு வருகிறது. அதனால் ஏராளமான பிணியாளர்கள் குணமடைந்து வருகிறார்கள். பழனி, ஸ்ரீரங்கம் போன்ற தேவஸ்தானங்களில் இந்திய வைத்யக் கலாசாலைகள் ஏற்படுத்தப்படலாம். தமிழ் நாட்டில் பல கோடி ரூபாய் செலவில் பல ஆங்கில வைத்யக் கலாசாலைகள் இருந்து வருகின்றன. இந்திய வைத்ய கலாசாலை மிகக்குறைவு. இவைகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் அக்கறை காண்பிக்க வேண்டும். தேசீய வைத்தியத்தை அபிவிருத்தி செய்யாமல் கிராம வைத்யம் பூர்த்தியாகாது. ஆங்கில வைத்யர்கள் கிராமத்திற்குச் சென்று வாழ்க்கை நடத்துவார்கள் என எதிர்பார்ப்பது பகற்கனவாகும். மூலிகைகளைக்குறித்து நன்கு அறிவு ஏற்பட்டால் தேசீய வைத்தியர்கள் மிகவும் குறைந்த செலவில் கிராமங்களில் தொழில் நடத்த முடியும். ஆகவே அரசாங்கம் தேவாலயங்கள், தர்மஸ்தாபனங்கள் முதலியவற்றின் அதிக வருமானத்தை தேசீய வைத்ய அபிவிருத்திக்கு உபயோகப்படுத்தினால் உசிதமான செலவாகும்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

பால சிகித்ஸை

[தமிழ் மொழியாக்கம்]

முதல் அத்யாயம்

அத பால சிகித்ஸைஷா வ்ருத்த வைத்ய மதானுகா.
ஸர்வேஷா முபகாராய ப்ருதகேவ விதன்யதே.

ஆரோக்கிய கல்பத்துருமம் பாலசிகித்ஸை என்றுப் பிரசித்தமான இந்நூல் கேரள தேசத்தில் பாலசிகித்ஸைக்கான கிரந்தங்களில் முதல் இடம் பெறுகிறது. விருத்த வைத்ய பரம்பரையில் எப்போதும் மனனம் செய்து வாப்பெற்ற நூல். லகுவானமுறைகள், நோய்களின் பல்வேறு நிலைகளில் பயன்தரக்கூடியவை, எளிதில் தயாரிக்கத்தக்கவை, நோய்நிலைக்கேற்பத் தக்க மாறுதல் செய்ய வசதிஉள்ளவை என்று இவைகளுக்கு அதிகமாக கேரளத்தில் செல்வாக்கு உண்டு. வைத்ய சந்திரிகையில் முன்னர் தமிழாக்கம் ஆரம்பித்து முதல் சில அத்தியாயங்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. மறுபடியும் அதையே முழுவதும் தர இறைவனின் அருளை எதிர்பார்த்து முற்படுகிறோம்.

அனுபவத்தால் முதிர்ந்த வைத்தியர்களின் கருத்தையொட்டி பாலர்களின் சிகித்ஸை முறை இங்கு நூல் வடிவாக்கப் பெறுகின்றது. பிறந்து பதினறு ஆண்டு காலம் வரையுள்ள வாழ்க்கைக் காலத்தைப் பாலப்பருவம் எனக் குறிப்பிடுகிறோம். இந்தப் பாலப்பருவத்தைப் பதினேறு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியிலும் சிகித்ஸை செய்வதில் தனிப்பட்ட மாறுதல்கள் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

அவையாவன :—(1) பிறந்தவுடன் (2) பதினைந்து நாட்கள் வரை, (3) 15 நாட்கள் முதல் 3 மாதங்கள் வரை, (4) 3 மாதத்திற்கு மேற்பட்டு (5) 6 மாதத்திற்கு மேற்பட்டு (6) ஓராண்டுக்குப் பின் (7) 3 ஆண்டுகளுக்குப் பின் (8) 5 ஆண்டுகளுக்குப் பின் (9) 8 ஆண்டுகளுக்குப் பின் (10) 10 ஆண்டுகளுக்குப் பின் (11) 12 ஆண்டுகளுக்குப் பின் என.

சிகித்ஸை இரண்டு விதம்—நோய் வராமல் தடுப்பது, நோய் வந்தபின் அதைப் போக்குவதெ்தன, இவ்வத்தியாயத்தில் பிறந்த உடன் செய்யவேண்டிய சிகித்ஸை முறை கூறப்படுகிறது.

பிறந்த உடன் சிசுவின் தலைப்பகுதியைத் தவிர மற்ற பாகங்கள் முழுவதையும் இந்துப்புத்தூள் சிறிது சேர்த்துக் குழப்பிய வெண்ணெய்யைப் பூசவேண்டும். 7 8 நிமிஷங்கள் கழித்து அதை தென்னை ஓலை முதலியதால் வழித்து எடுத்துவிட வேண்டும். பிறகு பலா தைலத்தை தலைமுதல் கால்வரைப் பூசிச் சிறிது பிடித்து விடவேண்டும். பிரஸவ காலத்தில் ஏற்பட்ட உடல் அழுத்தம் நீங்கும். குழந்தை தெளிந்தவுடன் தொப்புள் கொடியை நான்கு விரல் கூட தள்ளி ஒரு நூலைக்கட்டி அதற்கப்புறமுள்ள கொடியை வெட்டி நீக்கவும். தொப்புள் கொடியைக் கட்டிய நூலின் மற்றொரு முனையைச் சிசுவின் கழுத்தைச் சுற்றிக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டும்போது தொப்புள் கொடியைக் கட்டிய பகுதி தளருமலோ, தொப்புளைப் பற்றி இழுக்காமலோ, அவிழ்ந்து விடாமலோ, வேதனை தராமலோ இருக்க வேண்டும்.

ஸர்வகந்த திரவியங்களைச் சேர்த்துக் கொதிக்க வைத்த ஜலத்தைக்கொண்டு, பொறுக்கும் சூட்டில் சிசுவைக் குளிப்பாட்டுவது சிலர் பழக்கம். சிலரது கருத்தில் தங்கக்கட்டி வெள்ளிக்கட்டி இவைகளில் ஒன்றைப் பழுக்கக் காய்ச்சி ஜலத்தில் சுருக்கென நனைத்து நனைத்துச் சூடேற்றி அந்த ஜலத்தில் குளிப்பாட்டுவதும் நல்லதெனச் சிலர் கூறுவர்.

மஹாபலாதைலம்:— நல்லெண்ணெய் ஒரு பங்கு; சிற்றுமுட்டி வேர் கஷாயம் 8 பங்கு, தசமூலகஷாயம் 8 பங்கு, யவையரிசி, இலந்தை விதை, கொள்ளு இவைகளின் கஷாயம் 8 பங்கு, பசுவின் பால் 8 பங்கு, (ஆக எண்ணெய்க்கு 32 பங்கு திரவங்கள்) எண்ணெய்க்கு நிறை அளவில் நான்கில் ஒரு பங்கு கீழே கூறப்படும் கல்க திரவ்யங்கள். இவைகளைச் சேர்த்து முறைப்படி காய்ச்சிய தைலம் மஹாபலா தைலமாகும்.

கல்கத்திரவ்யங்களாவன:—காகோலீ, க்ஷீரகாகோலீ (இரண்டும் கிடைக்காவிடில் அமுக்கராக்கிழங்கு) ஜீவகம், ருஷபகம் (இரண்டும் கிடைக்காவிடில் நிலப்பூசனிக் கிழங்கு-விதாரீ காட்டுளுந்து வேர், காட்டுப்பயறு வேர், மேதா, மஹா மேதா (இரண்டும் கிடைக்காவிடத்து தண்ணீர் விட்டான் கிழங்கு) சீந்திற்கொடி, கர்கடசிங்கி, மூங்கிலுப்பு, பத்மகம், நீரதி மதுரம், ருத்தி, விருத்தி (இரண்டும் கிடைக்காவிடத்து நிலப்பனைக் கிழங்கு) கீரைப்பாலை,

அதிமதுரம், இந்துப்பூ, காரகில், மருத்துவெள்ளை, ஸரள தேவ தாரம், தேவதாரம், மஞ்சிட்டி, சந்தனத்தூள். வாஸனை கோஷ்டம், சிற்றேலம், மாகாளி, ஜடாமஞ்சி, கல்பாசி, பச்சிலை, அஸாருன், நன்னாரி, வசம்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சோம்பு, மூக்கரட்டை இவை.

இந்த தைலம் எல்லா வாத ரோகங்களிலும் சிறந்தது. விசேஷமாக ஸூதக வாயு நோய்களிலும் யோனி ரோகங்களிலும், யோனிக்குள் பிசு வைப்பதற்கும், ஸ்நானம் செய்வதற்கும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் பஸ்தி கொடுப்பதற்கும் சாலச் சிறந்தது. சுக்கில தோஷத்தையும் ரஜோ தோஷத்தையும் போக்கி நல்ல புத்திரன் உண்டாகும். வாயுவினால் சூம்பியதும், மர்மத்தில் அடிபட்டதும், நசுக்கப்பட்டதும், ஒடிந்ததும், தளர்ச்சியுற்றதுமான அங்கங்களுக்குப் பூச மிகச்சிறந்தது. ஆறு மாதங்கள் தொடர்ந்து உபயோகிக்க எவ்விதத் தசைத் தளர்ச்சியும் நீங்கும். விசேஷமாக குடலிறக்கத்தில் நல்ல குணமளிக்கும்.

ஸர்வ கந்த திரவ்யங்கள்:- ஏலரிசி, லவங்கப்பட்டை லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, சூடம், வால்மிளகு, காரகில், குங்குமப்பூ, கிராம்பு இவை ஸர்வகந்த திரவ்யங்களாகும் ஏலாதிகணத்திரவ்யங்களையும் ஸர்வகந்த திரவ்யங்களாகக் கருதுவது உண்டு. (இத் திரவ்யங்களைப் பொடி செய்து ஸ்நானத்திற்குத் தயாராகும் வென்னீரில் தூவி மூடிவைக்க அது ஸர்வகந்த ஜலமாகும்.)

பிறந்த உடன் முதல் மூன்று நாட்களில்

சிசுவைக் குளிப்பாட்டிய பிறகு நெல்லி முள்ளித்தூளையும் தங்கத்தையும் இழைத்துத் தேன் நெய் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது பிராம்மி, வசம்பு கடுக்காய், ஸ்வர்ண மாக்ஷிகம், தங்கம் இவைகளைப் பொடித்து அத்தூளை இழைத்துத் தேன் நெய் கலந்தும் கொடுக்கலாம்.

மார்பகத்திலுள்ள ஸிரைகளின் துவாரம் விரிவடைவதையொட்டி மூன்றாவது அல்லது நான்காவது நாளுக்கு முன்னர் தாய்ப்பால் உண்டாவதில்லை. அதனால் நெய்யையும் தேனையும் சேர்த்து அதில் அருகம்புல் நுனி போட்டு சுத்தி செய்து, நன் மந்திரங்கள் ஓதி, அருகம்புல்லை எடுத்தெறிந்து அத் தேனையும் நெய்யையும் அன்று மூன்று தடவை கொடுக்கவும். இரண்டாவது நாள் நறுந்தாளியின் சாறும் கல்கமுமிட்டுத் தயாரித்த பசுவின் நெய்யைத் தேன் கலந்து மூன்று நேரம் கொடுக்கவும். இவ்விதம் தாய்ப்பால் உண்டாகும் வரை கொடுந்து வரவும்.

அல்லது பிரசவித்த ஸ்த்ரீக்குச் சமமான தேகப்பாங்கு உடையவளும் அதே ஜாதியில் உதித்தவளும் சமமான மனதுடையவளும் நல்ல ஆரோக்கிய முள்ளவளும், பிரசவித்தவளுக்குத் தோழியாயமுள்ள ஸ்த்ரீயின் முலைப்பாலையும் கொடுக்கலாம். இவ்வித தகுதி பெருதவளின் பால் கொடுப்பது சரியல்ல.

முலைப்பால் கொடுக்கு முன்னர் சிசுவின் உள்ளங்கையளவுள்ள புதிய பசுவின் வெண்ணெய்யைப் புகட்டி விட்டுப் பிறகு பால் கொடுக்கவும். இவ்விதம் தினம் காலையிலும் மாலையிலும் தேக சக்திக்கேற்றவாறு இம் முறையைப் பின்பற்றுவது நல்லது

சிசுவிற்கு பால் கொடுக்கு முன் மூலைக்காம்புகளை சுத்த ஜலத்தாலோ, சந்தனம் விலாமுச்சம்வேர், சித்தாமுட்டி இவைகளின் கஷாயத்தாலோ நன்கு அலம்பவேண்டும்.

தாயின் பால் தான் சிசுவிற்கேற்றது. தாய்ப்பால் கொடுக்க முடியாவிடில், பால் கொடுக்கக்கூடிய இரு தாதிகளை அமர்த்த வேண்டும். அவர்கள் சிசுவிடம் அன்புள்ளவர்களாயும், அங்கக் குறைவில்லாதவர்களாயும், நோயற்றவர்களாயும் நடுவயதினராயயுப், உயிருடனிருக்கும் சிசு உள்ளவர்களாயும், ஜாதி-தேகபாங்கு இவைகளில் தாயுடன் ஒற்றுமை உள்ளவர்களாயும், பிரம்மசர்யம் உள்ளவர்களாயும் (புருஷசங்க மில்லாதவர்களாயும்) இருக்க வேண்டும். அவர்களது பால் கெடாதவாறு ஹிதமாக ஆகாரத்தையும் நடவடிக்கைகளையும் பாதுகாக்க வேண்டும்.

தாய்பால் குறைவதன் காரணம் :

அபானவாயுவின் கட்டுப்பாட்டிலுள்ள மல மூத்திராதிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தலாலும், சோகம், உபவாசம் ஆயாசம் இவைகளாலும் சுக்லதாதுக் குறைவாலும், அதிகமாக நெருப்பின் அருகே இருத்தலாலும், இரவில் கண் விழித்தலாலும், வரட்சியாயும் சூடாயும் உள்ள ஆகாரத்தை அதிகமாக உண்பதாலும் ஸ்நேகம் (எண்ணைத் தேய்த்துக் குளித்தல், நெய் போன்று எண்ணைப் பசை பதார்த்தங்கள் உண்ணுதல் போன்றவை) குறைவதாலும் தாயிடம் பால் பெருகுவது குன்றுகிறது.

தாய்பால் குறைவைத் தடுக்க :

முன் கூறிய காரணங்களால் தாயிடம் பால் குறைந்தால் முருங்கை இலையை (நரம்பெடுத்து உப்புக் கூட்டி வேகவைத்து) வெந்தபின் சிறிதளவு நெய் விட்டு வதக்கி அதைச் சாப்பிட தாய்ப்பால் பெருகும்- அடபதியன் கிழங்கின் கஷாயத்தில் அரிசி வேகவைத்துக் கஞ்சியாக்கி அதில் தேங்காய்ப் பால் சேர்த்துச் சாப்

பிடுவதாலும் தாயிடம் பால் பெருகும். அவ்விதமே தாமரை கேச ரத்தையும் சீந்திற் கொடியையும் தூள்செய்து நெய் சேர்தநுச் சாப்பிடுவதும், அடபதியன் கிழங்கு, நன்னாரி, கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி இவைகளின் சூர்ணத்தை நெய்யுடன் சாப்பிடு வதும் நல்லது.

கவலை துக்கமிருந்தால் அதைப் போக்கி அவளுக்கு மனதிற்கு உற்சாகமளிக்க வேண்டும். அறுபதாங் குருவையரிசி (நவரை அரிசி) யின் சாதத்தை நெய் சேர்த்து அருந்தச்செய்ய வேண்டும், இரவில் பாலுடன் நவரை அரிசிச் சாதத்தையோ அல்லது எளி தில் ஜீர்ணமாகும் மற்ற அரிசியின் சாதத்தையோ சாப்பிடலாம்; அல்லது சசாங்க கிரணமெனும் திரட்டுப் பால் பக்ஷணத்தைச் சாப்பிடுவதும் நல்லது.

இவ்விதம் செய்தும் தாய்ப்பால் பெருகவில்லையாகில், நடு நடுவே வாயுவை அனுலோமனம் செய்யக்கூடிய விசேஷ முறை களை ஆராய்ந்து உபயோகிக்க வேண்டும். அவையாவன:—

சிற்றாமுட்டிவேர், அதிமதுரம், வெள்ளைச்சாரணை, காட்டு உளுந்துவேர், காட்டுப்பயறுவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சித்தரத்தை, அமுக்கராக் கிழங்கு, தேவதாரு, புத்தரிச்சுண்டை வேரின் மேல் தோல், சுக்கு, ஜீரகம், திராக்ஷை, சாரைப்பருப்பு, கோதுமை இவைகளின் கஷாயத்தை நெய்யும் பாலும் சேர்த்துச் சாப்பிடலாம் வேறு மார்க்கத்தில் செல்லும் வாயுவை அனுலோ மனம் செய்து வழிப்படுத்தி ஸ்தன்யத்தையும் அதிகப்படுத்து மாதலால் இதை விசேஷமாக உபயோகித்தல் நலம். பாலுள்ள ஹிதமான ஓஷதிகளையும் பாலையும் ‘சீது’ எனப்படும் மது வகை யைத்தவிர மற்ற மதுவர்க்கங்களையும் நீர்ப்பாங்கான தேசத்தில் உண்டான பிராணிகளின் மாம்சத்தையும் ஆகாரவகையாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

எத்தனை நாட்களுக்கு சிசுவின் தாயார் சிசுவிற்கு பால் கொடுக்க முடியாமலிருக்கிறாளோ, அத்தனை நாள் தாதிகள் பால் கொடுக்க வேண்டும். தாதி இல்லாவிடில் தாய்ப் பாலுக்குச் சம மாக எளிதில் ஜீர்ணமாகும்படி பசுவின் பாலையோ ஆட்டின் பாலையோ புகட்டலாம். பாலில்லாமல் ஒருநாள் கூட தள்ளக் கூடாது

அவ்விதம் முலைப்பாலில்லாமல் ஆட்டுப்பாலோ பசுவின் பாலோ கொடுக்க நேரிடின், ஓரிலை வேரையோ ஓரிலைவேர்

அல்லது பிரசவித்த ஸ்த்ரீக்குச் சமமான தேகப்பாங்கு உடையவளும் அதே ஜாதியில் உதித்தவளும் சமமான மனதுடையவளும நல்ல ஆரோக்கிய முள்ளவளும், பிரசவித்தவளுக்குத் தோழியாயுமுள்ள ஸ்த்ரீயின் முலைப்பாலையும் கொடுக்கலாம். இவ்வித தகுதி பெருதவளின் பால் கொடுப்பது சரியல்ல.

முலைப்பால் கொடுக்கு முன்னர் சிசுவின் உள்ளங்கையளவுள்ள புதிய பசுவின் வெண்ணெய்யைப் புகட்டி விட்டுப் பிறகு பால் கொடுக்கவும். இவ்விதம் தினம் காலையிலும் மாலையிலும் தேக சக்திக்கேற்றவாறு இம் முறையைப் பின்பற்றுவது நல்லது

சிசுவிற்கு பால் கொடுக்கு முன் மூலைக்காம்புகளை சுத்த ஜலத்தாலோ, சந்தனம் விலாமுச்சம்வேர், சித்தாமுட்டி இவைகளின் கஷாயத்தாலோ நன்கு அலம்பவேண்டும்.

தாயின் பால் தான் சிசுவிற்கேற்றது. தாய்ப்பால் கொடுக்க முடியாவிடில், பால் கொடுக்கக்கூடிய இரு தாதிகளை அமர்த்த வேண்டும். அவர்கள் சிசுவிடம் அன்புள்ளவர்களாயும், அங்கக் குறைவில்லாதவர்களாயும், நோயற்றவர்களாயும் நடுவயதினராயயுப், உயிருடனிருக்கும் சிசு உள்ளவர்களாயும், ஜாதி-தேகபாங்கு இவைகளில் தாயுடன் ஒற்றுமை உள்ளவர்களாயும், பிரம்மசர்யம் உள்ளவர்களாயும் (புருஷசங்க மில்லாதவர்களாயும்) இருக்க வேண்டும். அவர்களது பால் கெடாதவாறு ஹிதமாக ஆகாரத்தையும் நடவடிக்கைகளையும் பாதுகாக்க வேண்டும்.

தாய்பால் குறைவதன் காரணம் :

அபானவாயுவின் கட்டுப்பாட்டிலுள்ள மல மூத்திராதிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தலாலும், சோகம், உபவாசம் ஆயாசம் இவைகளாலும் சுக்லதாதுக் குறைவாலும், அதிகமாக நெருப்பின் அருகே இருத்தலாலும், இரவில் கண் விழித்தலாலும், வரட்சியாயும் சூடாயும் உள்ள ஆகாரத்தை அதிகமாக உண்பதாலும் ஸ்நேகம் (எண்ணைத் தேய்த்துக் குளித்தல், நெய் போன்று எண்ணைப் பசை பதார்த்தங்கள் உண்ணுதல் போன்றவை) குறைவதாலும் தாயிடம் பால் பெருகுவது குன்றுகிறது.

தாய்பால் குறைவைத் தடுக்க :

முன் கூறிய காரணங்களால் தாயிடம் பால் குறைந்தால் முருங்கை இலையை (நரம்பெடுத்து உப்புக் கூட்டி வேகவைத்து) வெந்தபின் சிறிதளவு நெய் விட்டு வதக்கி அதைச் சாப்பிட தாய்ப் பால் பெருகும்- அடபதியன் கிழங்கின் கஷாயத்தில் அரிசி வேக வைத்துக் கஞ்சியாக்கி அதில் தேங்காய்ப் பால் சேர்த்துச் சாப்

பிடுவதாலும் தாயிடம் பால் பெருகும். அவ்விதமே தாமரை கேச ரத்தையும் சீந்திற் கொடியையும் தூள்செய்து நெய் சேர்ததுச் சாப்பிடுவதும், அடபதியன் கிழங்கு, நன்னரி, கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி இவைகளின் சூர்ணத்தை நெய்யுடன் சாப்பிடுவதும் நல்லது.

கவலை துக்கமிருந்தால் அதைப் போக்கி அவளுக்கு மனதிற்கு உற்சாகமளிக்க வேண்டும். அறுபதாங் குருவையரிசி (நவரை அரிசி) யின் சாதத்தை நெய் சேர்த்து அருந்தச்செய்ய வேண்டும், இரவில் பாலுடன் நவரை அரிசிச் சாதத்தையோ அல்லது எளிதில் ஜீர்ணமாகும் மற்ற அரிசியின் சாதத்தையோ சாப்பிடலாம்; அல்லது சசாங்க கிரணமெனும் திரட்டுப் பால் பக்ஷணத்தைச் சாப்பிடுவதும் நல்லது.

இவ்விதம் செய்தும் தாய்ப்பால் பெருகவில்லையாகில், நடு நடுவே வாயுவை அனுலோமனம் செய்யக்கூடிய விசேஷ முறைகளை ஆராய்ந்து உபயோகிக்க வேண்டும். அவையாவன:—

சிற்ருமுட்டிவேர், அதிமதுரம், வெள்ளைச்சாரணை, காட்டு உளுந்துவேர், காட்டுப்பயறுவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சித்தரத்தை, அமுக்கராக் கிழங்கு, தேவதாரு, புத்தரிச்சுண்டை வேரின் மேல் தோல், சுக்கு, ஜீரகம், திராக்ஷை, சாரைப்பருப்பு, கோதுமை இவைகளின் கஷாயத்தை நெய்யும் பாலும் சேர்த்துச் சாப்பிடலாம் வேறு மார்க்கத்தில் செல்லும் வாயுவை அனுலோமனம் செய்து வழிப்படுத்தி ஸ்தன்யத்தையும் அதிகப்படுத்துமாதலால் இதை விசேஷமாக உபயோகித்தல் நலம். பாலுள்ள ஹிதமான ஒஷதிகளையும் பாலையும் 'சீது' எனப்படும் மது வகையைத்தவிர மற்ற மதுவர்க்கங்களையும் நீர்ப்பாங்கான தேசத்தில் உண்டான பிராணிகளின் மாம்சத்தையும் ஆகாரவகையாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

எத்தனை நாட்களுக்கு சிசுவின் தாயார் சிசுவிற்கு பால் கொடுக்க முடியாமலிருக்கிருளோ, அத்தனை நாள் தாதிகள் பால் கொடுக்க வேண்டும். தாதி இல்லாவிடில் தாய்ப் பாலுக்குச் சமமாக எளிதில் ஜீர்ணமாகும்படி பசுவின் பாலையோ ஆட்டின் பாலையோ புகட்டலாம். பாலில்லாமல் ஒருநாள் கூட தள்ளக் கூடாது

அவ்விதம் முலைப்பாலில்லாமல் ஆட்டுப்பாலோ பசுவின் பாலோ கொடுக்க நேரிடின், ஓரிலை வேரையோ ஓரிலைவேர்

மூவிலைவேர் இரண்டையோ, சிறுபூளை வேரையோ, முள்ளுக்கத்திரி வேரையோ இடித்துக கிழிகட்டி முறைப்படி பாலிலிட்டுக் காய்ச்சி சர்க்கரை சேர்த்துக் கொடுக்க வேண்டும். தனிப்பாலாக புகட்டக் கூடாது.

நோயற்ற சிசுவிற்கு தினந்தோறும் குளிப்பாட்டுவது நல்லது. பாலில்லாத வரண்ட தேங்காயின் நீரை மேலுக்குத் தேய்த்துப் பிறகு குளிப்பாட்ட வேண்டும். குளிப்பாட்டும் போது தலைக்குக் குளிர்ந்த நீரையும் உடலுக்கு ஆலந்தழை போட்டுக் காய்ச்சிய வென்னீரையும் உபயோகிக்கவும். கிணறு ஓடை குளம் இவை களிலிருந்து எடுக்கப்பட்ட ஜலத்தை குளிப்பாட்ட உபயோகிக்க லாம். விருக்ஷி இலை அல்லது சந்தனம் அகில் அல்லது தேவ தாரு, சிற்ருமுட்டி அல்லது அருகம்புல் வசம்பு கோஷ்டம் இவை களைப் போட்டுக் காய்ச்சப்பட்ட ஜலம் உடலிலிட்டு குளிப்பாட்ட நல்லது.

ஆருவது நாளிரவில் ரக்ஷையிட்டு பலி கொடுத்து சிசுவின் பந்துக்கள் அன்றிரவு முழுவதும் விழித்திருத்து சிசுவைப் பாது காக்க வேண்டும்.

முதல் பதினைந்து நாட்களுக்குள்

பத்து நாட்கள் கழிந்த பிறகு பதினேரும் நாள் பெற்றவளை யும் சிசுவையும் முறைப்படி நீராட்டி சுத்தமானதும் மெதுவான தலையணையுள்ளதும் நல்ல வெளுத்த விரிப்புள்ளதுமான வேறு படுக்கையிலிட்டு படுக்கையைச் சுற்றிலும் கெடுதல்களை யகற்றும் நல்ல தூபங்களைப் போடவேண்டும்.

கலைமான், காட்டெருமை, ஆடு, காண்டாமிருகம் இவைகளின் கொம்பு – குளம்புகளையும் காவுஜபானும் வெண்கடுகும் சேர்த்து இடித்து நெய் சேர்ந்து அதைத் தூபமிட பிரஸவ அறையிலுள்ள கெடுதல்கள் விலகும். காவுஜபானுக்கும் வெண்கடுகுக்கும் பதிலாக உள்ளிப் பூண்டுத் தோலைச் சேர்க்கலாம். அல்லது காய்ந்த அருகம்புல்லையும் வேப்பம் பட்டையுமோ, அல்லது வெண் குங்கிலியம், குக்கில், ஒட்டகை நகம் இவைகளையோ தூபமிடலாம். மயில் தோகையைத் தனியாகத் தூபமிடலாம். அல்லது மயில் தோகை அரிதாரம் சந்தனம் அகில் கடுகு இவைகளை இடித்து நெய் சேர்த்தும் தூபமிடலாம். இந்த தூபம் எல்லா கிரகபீடை களையும் அகற்றவல்லதெனச் சிறந்த வைத்தியர்கள் கருது கிருர்கள்.

அருகம்புல் பிராம்மீ முதலிய சிறந்த மூலிகைகளேயும், மங்கள முண்டாக்கும் பத்மராகம் நீலம் முதலிய சிறந்த மணிகளேயும் சிசுவின் தலேயிலோ கழுத்திலோ புஜங்களிலோ அல்லது இம் மூன்று இடங்களிலுமோ கட்டி வைப்பது சாலச் சிறந்தது. அல்லது இத்த மணிகளுக்கும் மூலிகைகளுக்கும் பதிலாக சிசுக்களுக்கு ஏற்படும் கெடுதல்களேப் போக்குவதில் தனிப் பெருமை கொண்ட வசம்பைக் கட்டுவதும் நல்லது.

வசம்பைத் தரிப்பதால் சிசுவின் ஆயுள் வளரும். மேதை ஞாபகசக்தி ஆரோக்யம் இவை நிலேத்திருக்கும்.

பிறகு அவரவர் குல வழக்கப்படி சிசுவிற்குப் பெயரிட வேண்டும் பெயரிடுதல் போன்ற நியமங்களே விடுவதால் தெய்வக்குற்றமும் தெய்வ கோபத்தால் வாதாதி தோஷங்களின் சீர்கேடும் ஏற்படுமாதலால் விதிகளேப் பின்பற்றுவது அவசியமாகும்.

இந்த சிசுவிற்குப்(பிறந்து)பதினேந்து நாட்களுக்குள் ஜ்வரம் முதலிய நோய்கள் ஏற்பட்டால் சிசுவின் தாய்க்கே சிகித்சைசெய்ய வேண்டும். சிசு தாயின் பாலிலேயே வளருமாதலால் சிசுவிற்குத் தனியே சிகித்சை செய்யவேண்டியதில்லே. பிணி கடுமையாகில், தாய்க்கு மாத்திரம் அளிக்கப்படும் சிகித்சை மட்டும் போதாது. அப்பொழுது பிணிக்குக் காரணமாயிருக்கும் வாதபித்த கபங்கள் அதிகப்பட்டு கெடாதவண்ணம் சிகிச்சை செய்ய வேண்டும். வியாதி பலதரப்பட்டிருந்தாலும் அவைகளின் முக்கியகாரணமான வாதபித்த கபங்களின் சீர்கேட்டிற்கே (ஹேது விபரீத) சிகிச்சை செய்யவேண்டும். அந்தந்த வியாதிக்கேற்ற தனிப்பட்ட (வியாதி விபரீத) சிகிச்சை செய்ய வேண்டியதில்லே. வியாதி விபரீத சிகிச்சை செய்யப்படின் அக்காலத்தில் சிசு அதைத் தாங்க முடியாது. அதனுல் லகுவான அளவில் வாதபித்த கபங்களின் சீர்கேட்டைத் துணிக்கும் ஹேது விபரீத சிகிச்சையையே செய்வது நல்லது.

வாயுவின் கோபம் காரணமாக உண்டாகும் நோய்களில் கருநொச்சி எருக்கம்பழுப்பு, கோரைக்கிழங்கு, சித்தரத்தை, தேவதாரம், மூக்கரட்டை இவைகளே எல்லாம் வகைக்கு சமனெடை சேர்த்துத் தோலாவில் மூன்றில் ஒரு பங்கு அளவு எடுத்துக் கஷாயமிட்டுக் கொடுக்கலாம். பித்த நோய்களில் சிறுகாஞ்சோரிவேர், ஆடாதோடை, கோரைக்கிழங்கு, சந்தனம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், பர்பாடகம் இவைகளின் கஷாயமும் கபநோய்களில் சுக்கு, வசம்பு, மல்லிவிதை, நாட்டு நிலவேம்பு, பர்பாடகம் இவை

களின் கஷாயமும் நல்லது. இவைகளின் அளவு முன்போலவே. இம்மூன்று கஷாயங்களையும் முறையே ஜீரகத்தூள், சர்க்கரை, தேன் இவை சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

ஒரு தோலாவில் மூன்றில் ஒரு பங்கு திரவியத்தைக்கொண்டு 8 தோலா அளவு (சுமார் $3\frac{3}{4}$அவுன்ஸ்) ஜலத்தில் பதினாறில் ஒரு பங்கு மிகுதியாகக் கஷாய மிடவேண்டு மென்பது தன்வந்தரியின் கருத்து. அதை சிசுவிற்குப் பலதடவைகளில் சங்கு வாயிலாக புகட்டவேண்டும். [கஷாயம் இடும்போது நான்கில் ஒரு பங்காக கஷாயம் சுண்டியதும் எடுத்து வடிகட்டி மறுபடியும் சூடாக்கி தேவையான அளவில் குறுக்கிக் கொள்வது வழக்கம்.]

கபத்தால் மூக்கு முதலிய துவாரங்கள் அடைபட்டால், சித்தா முட்டிவேர், கோரைக்கிழங்கு புளியார்க்கு, சித்தரத்தை இவைகளைத் தூளாக்கி துணியில் வடிகட்டி முலைப்பாலில் குழைத்து நெற்றியிலிடவேண்டும். அல்லது முருங்கையிலைச் சாற்றையோ, வில்வ இலைச் சாற்றையோ துணியில் நனைத்து நெற்றியிலிட வேண்டும்.

சிசுவுக்கு மலபந்தமிருப்பின் கடுக்காயைக் காய்ச்சி ஆற்றப் பட்ட வெந்நீரில் இழைத்து தாய் தனது முலைகளில் தடவிக் கொண்டு சிசுவிற்கு பால் கொடுக்கவேண்டும். அல்லது சிற்றாமணக்கெண்ணெய்யைத் தாய்ப்பாலில் மர்த்தித்துக் கொடுக்கலாம் அல்லது திராக்ஷை கஷாயத்தையோ, நெல்லிக்காய் சூர்ணத்தையோ சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

அதிகமாக மலமிளகி வெளியானல், அதிவிடயத்தூளைத் தேன் விட்டுக் கொடுக்கலாம்.

மூத்திரம் தடைப்பட்டால் நெருஞ்சில் முள்ளின் தூளைத் தேன் சேர்த்துக் கொடுக்கலாம்.

முலை குடிக்காதிருந்தால் ஏலரிசி, திப்பிலி, வாய்விளங்கம், தாளிசபத்திரி இவைகளின் தூளை தேன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது இலந்தை விதைப் பொடியையும் கொடுக்கலாம்.

தலைவேதனை இருந்தால் முள்ளுக்கத்திரி வேர், வில்வ வேர் கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், பச்சைக்கற்பூரம், வெட்டி

வேர் இவைகளை முலைப்பாலில் இழைத்து நெற்றியில் தேய்க்க வேண்டும்.

ரோகநிலைக்கேற்றவாறு சிசுவின் ஸ்நானம் முதலியவைகளைத் தடுத்து இதமான பத்திய ஆகாரங்களைத் தாய்க்கு அளிக்க வேண்டும்.

எளிதில் ஜீர்ணமாகாதது, கபத்தை அதிகரிக்கச் செய்வது, மல மூத்திரங்களைக் கட்டுப்படுத்துவது, ஜீர்ணமாகும் காலத்தில் புளிப்பு உண்டாக்குவது போன்ற ஆகாரங்களையும் மருந்துகளையும் மூன்றுவது வயது முவுயும் வரை கொடுக்கக்கூடாது. இவ்வித ஆகாரங்கள் எக்காலத்திலும் கெடுதியை விளைவிக்கக்கூடியவை எனினும், சிசுவிற்கு சீக்கிரமே பல கெடுதிகளை விளைவிக்கக் கூடிவையாதலால் இவைகளைக் கட்டாயம் கொடுக்கக்கூடா தென்று கட்டுப்படுத்தப் படுகின்றது.

பதினைத்து நாட்களாகாத சிசு கண்களைத்திறக்காமல் அசையாமல் முலை குடிக்காமல் எப்பொழுதும் அழுது கொண்டிருந்தால் அது பிழைக்காது. மலம் மூத்திரம் கட்டுப்பட்டு சிகிச்சை செய்தும் வெளியாகாவிட்டாலும், கழுகு போன்று தொண்டை கம்மி சத்தம் வெளிப்பட்டாலும், கெட்ட அறிகுறியே.

முகத்தில் சட்டென மாருத நிறமாறுதல், கண்குழி விழுதலும், உடல் முழுவதும் எச்சில் பட்டதுபோன்ற தோற்றம், அடிக்கடி கட்டி அடித்தால் போன்று வீரிட்டழுதல், கண்களில் ரத்த சீரைகள் தடித்து சிவத்தல், அழும்போது தொண்டை அடைபடுதல், பயத்தால் நடுங்குவது போள்ற நடுக்கம், உடல் முழுவதும் ரத்தம் போன்ற சிகப்பு, கைகால்களில் நீலம் பாய்தல், நெற்றியில் நீல நரம்புகள் படர்தல், சிவந்த உருண்டையான புள்ளிகள் தடிப்புகள் காணுதலும், சிசுவுக்கு மரணம் விளைவிக்கும் குறிகளாகும். இந்தக் குறிகளில் ஏதாவது ஒரு குறி கண்டாலும் வைத்யன் உடன் கவனித்து தக்க பரிஹாரம் தர முயலவேண்டும். நல்ல ஸித்தமான – கைகண்ட மருந்துகளை ரோக நிலை உடல் நிலை கால நிலை அறிந்து உபயோகிப்பின் வைத்யனின் சிகிச்சை தவருமல் நல்ல பலனளிக்கும்.

இரண்டாவது அத்தியாயம்
பதினைந்து நாட்களுக்குப் பிறகு

பதினைந்து நாட்கள் கழிந்த பின்னர், தினமும் சந்திவேளை களில் ரக்ஷைக்காக உள்ள வழக்கமான சாந்தி முறைகளை அனுஷ்டிக்கவேண்டும். உடன் பிறந்த சிசுவிற்கு அந்த அந்த வியாதிக்குச் செய்யும்படி முதலத்தியாயத்தில் கூறப்பட்ட சிகித்ஸை முறைகளையே அளவு மாத்திரம் அதிகமாக்கி செய்து வரலாம் முன் கூறப்பட்ட கஷாயங்களில் கஷாயத்திரவியத்தின் அளவை மாத்திரம் இருமடங்காக்கிக் கொண்டு அதே அளவு ஜலத்தில் கஷாயமாக்கிக் கொள்ளவும்.

பொதுவாக பிறந்தவுடன் சிசு கெடுதியடைந்த முலைப்பாலை அருந்த நேரிடின், அதனால் ஏற்படும் வாதாதி தோஷங்களின் சேர்க்கை வியாதிக்குக் காரணமாகின்றது. அதனால் வைத்யன் தாயின் பாலை முதலில் பரிசோதனை செய்யவேண்டும். சேறுபட்ட பின் அலம்புவதை விட தூரத்தில் சேறு படாதவாறு இருத்தல் நலமல்லவா? ஆனால் பதினைந்து நாட்களுக்குள் தாயின் பால் புதிதாக இருப்பதாலும், அதில் தோஷங்களின் கெடுதி வெளிப்ப டாது மிக அல்பமாக இருப்பதாலும் பரீக்ஷித்து அறிய முடியாதா கையாலும் பதினைந்து நாட்களுக்குள் சிசுவிற்கு ஏற்படும் வியாதி களில் ஸ்தன்ய சுத்தியைப் பற்றி அதிகம் சிந்திக்கவேண்டிய தில்லை. ஆனால் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஸ்தன்யத்தி லுள்ள கெடுதிகளை வாதபித்தகபங்களின் ஸ்வரூபத்தை ஒட்டி ஆராயவேண்டியது அவசியமாகிறது.

தாய்ப்பாலின் பரீக்ஷை :—

சுத்தமான தாய்ப்பாலை ஜலத்துடன் கலக்க ஒன்றாகும். அதுவே வாயுவால் கெட்டிருந்தால். ஜலத்துடன் கலந்தால் பொங்கிநிற்கும்; துவர்ப்பு ரஸத்துடனும் நுரையுடனும் காணும். பித்தத்தால் கெட்டிருந்தால் மச்சள் நிறமுள்ள கோடுகள் படர்ந்து காணும், சூடும் உறப்பும் புளிப்புமுள்ளதாக இருக்கும். கபத்தால் கெட்டிருந்தால், ஜலத்தில் ஆழ்ந்து படியும். கொழுப் பும் பிசுபிசுப்பும் உப்பு சுவையும் காணும். இரண்டு தோஷங்களோ மூன்று தோஷங்களோ கூடினால் அந்தந்தக் குறிகள் சேர்ந்து காணப்படும். இவ்விதமான கெடுதி அடைந்தபால் சாப்பிட்டால் சிசுவிற்கு அவ்வகையான நோய்கள் காணப்படும். அதனால் நன்கு சூக்ஷ்மமாகப் பரீக்ஷித்து தாயாருக்கு பால்தோஷம் நீங்க சிகிச்சை செய்யவேண்டும். தாய்ப்பாலில் அவ்விதம் தோஷம் பரீக்ஷையில் புலப்படாவிட்டாலும், சிசுவின் வியாதிக்கேற்ப குறிகளைக் கொண்டு தோஷக் கெடுதியை ஊகித்து அதற்கேற்ற சிகித்சை செய்யவேண்டும்.

ஒரு பக்ஷத்தில் ஒரு தடவையோ இருதடவையோ தாய்ப்பாலை பரிசோதிக்கவேண்டும். பரிசோதனையில் தாய்ப்பால் கெட்டிருந்தால் அதைக் குடித்த சிசுவிற்கு சிகிச்சை செய்யவேண்டும். தாய்ப்பால் கெட்டிருத்து அதனுல் சிசுவிற்கு வியாதி ஏற்படின் உடனேயே பூர்வரூபநிலையிலேயே சிகிச்சை செய்யவேண்டும் முடியாவிடில் குறிகள் நன்கு புலப்பட்ட உடனேயாவது சிகிச்சை செய்யவேண்டும்.

தாய்ப்பால் கெட்டிருந்தால், வில்வத்தின் வேரை நன்கு ஆறிய வென்னீரை விட்டரைத்து ஸ்தனங்களில் தடவிக்கொள்ள லாம். சித்தரத்தை, அதிமதுரம், நன்னாரி இம்மூன்றையோ, தேவதாரு, சதகுப்பை, கொத்துமல்லிவிதை இம்மூன்றையோ சித்தாமுட்டிவேர் கஷாயம் விட்டரைத்துத் தடவிக்கொள்ளலாம். இம்மூன்று லேபங்களும் எல்லாவித தோஷங்களையும் போக்க வல்லவை. ஒரு நாளில் இருதடவை மூன்றேமுக்கால் நாழிகை யளவு இவைகளைப் பூசிவரவேண்டும். ஒவ்வொரு தடவையிலும் அவை உலராதவாறு அடிக்கடி மேல் பூசிவரவேண்டும். மூன்றே முக்கால் நாழிகைக்குப் பிறகு ஸ்தனங்களைக் கழுவித் தேய்த்து விடவும்.

வாதத்தால் ஸ்தன்யம் கெட்டிருக்கிறது என நிச்சயித்திருந் தால் சித்தாமுட்டி, அதிமதுரம், கீரைப்பாலை, சித்தரத்தை, சுக்கு, தேவதாரு, காட்டுளுந்துவேர், காட்டுப்பயிறுவேர் இவைகளைக் கொண்டு கஷாயம் தயாரித்து திப்பிலியும் இந்துப்பும் மேம்பொடி யாக்கி சேர்த்துத் தாயார் சாப்பிடவேண்டும். அல்லது வில்வவேர் முன்னைவேர், பெருவாகைவேர், குமிழம்வேர், பாதிரிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலக்குமிழங்கிழங்கு இவைகளைக் கஷாயமிட்டும் இந்துப்பும், திப்பிலிசூர்ணமும் சேர்த்து சாப்பிட லாம். பித்தத்தால் ஸ்தன்யம் கெட்டிருந்தால் திருமண பஞ்ச மூலம், நெவ்லிக்காய், ஆலம்பட்டை, அத்திப்பட்டை, இத்திப் பட்டை, அரசம்பட்டை, கரு நொச்சிவேர், சித்தரத்தை இவை களால் கஷாயம் தயாரித்து சர்க்கரையும் நெய்யும் சேர்த்துத் தாயார் சாப்பிடவும். அல்லது கீரைப்பாலை, தண்ணீர்விட்டான், அதிமதுரம், சந்தனம், நன்னாரி, நெல்லிமுள்ளி, விலாமுச்சம்வேர், முதியார்கூந்தல், தேவதாரு இவைகளைக் கஷாயமிட்டு சர்க்கரை நெய் சேர்த்து சாப்பிடலாம்.

கபத்தால் ஸ்தன்யம் கெட்டிருந்தால் வேப்பம்பட்டை, திரி பலை, திப்பிலி, பேய்ப்புடல், சீந்திற்கொடி இவைகளை கஷாயமிட்டு தேன் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். அல்லது அதிவிடயம்,

வசம்பு, நெல்லிமுள்ளி, நிலவேம்பு, கடுகுரோகிணி, தண்ணீர் விட்டான்கிழங்கு, கோவைக்கிழங்கு, தாளிசபத்திரி, திப்பிலி இவைகளை கஷாயமிட்டு தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

இரண்டு அல்லது மூன்று தோஷங்களின் சேர்க்கையான கெடுதி ஏற்பபட்டிருந்தால் அதற்கேற்ப முன் கூறிய கஷாய யோகங்களைக் கூட்டி அமைத்துக்கொள்ளலாம்.

கெட்ட ஸ்தன்யத்தைக் குடிப்பதால் சிசுவிற்கு மலக்கட்டு மூத்திரக்கட்டு, உட்காங்கை, வாந்தி முதலிய ரோகங்கள் ஏற்படும் இவைகளை பலமாகக் கொண்டும், காலதோஷத்தையும் அபத்யத்தையும் காரணமாகக் கொண்டும் ஜ்வரம் முதலிய பலவித ரோகங்கள் உண்டாகலாம். அதனல் சிசுவையும் அதே திரவியங்களைக்கொண்டே தகுந்த அளவில் கஷாயம் செய்து சாப்பிடச் செய்வதால், கெட்ட ஸ்தன்யத்தைச் சாப்பிடுவதால் ஏற்படும் நோய்கள் வராமல் பாதுகாக்கலாம். அவ்விதம் வியாதிகள் ஏற்பட்டுவிடினும், அவைகளின் பூர்வரூப நிலையிலேயே சிகிச்சைகள் செய்யவேண்டும். அதன் விபரத்தை முறையே விளக்குவோம்.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS ETC.

Please Contact :

PURI BROTHERS (REGD.)
MUSK MERCHANTS
JULLUNDUR-1

Grams : "VENKATESH" Phone : **3923**

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு. சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிராக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதருஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும, போக்குவதிலும்.

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.